# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## நான்காம் திருவாய்மொழி - சார்வே
## ஆழ்வார் தாம் முதலில் அநுசந்தித்த பக்தி பலத்தோடு சேர்ந்தமையை அருளிச் செய்தல்

** சார்வே தவ நெறிக்குத் * தாமோதரன் தாள்கள் *
கார் மேக வண்ணன் * கமல நயனத்தன் **
நீர் வானம் மண் எரி காலாய் * நின்ற நேமியான் *
பேர் வானவர்கள் * பிதற்றும் பெருமையனே 1

பெருமையனே வானத்து இமையோர்க்கும் * காண்டற்கு
அருமையனே * ஆகத்து அணையாதார்க்கு ** என்றும்
திரு மெய் உறைகின்ற * செங்கண் மால் * நாளும்
இருமை வினை கடிந்து * இங்கு என்னை ஆள்கின்றானே 2

ஆள்கின்றான் ஆழியான் * ஆரால் குறை உடையம்? *
மீள்கின்றது இல்லைப் * பிறவித் துயர் கடிந்தோம் **
வாள் கெண்டை ஒண் கண் * மடப் பின்னை தன் கேள்வன் *
தாள் கண்டு கொண்டு * என் தலை மேல் புனைந்தேனே 3

தலை மேல் புனைந்தேன் * சரணங்கள் * ஆலின்
இலை மேல் துயின்றான் * இமையோர் வணங்க **
மலை மேல் தான் நின்று * என் மனத்துள் இருந்தானை *
நிலை பேர்க்கல் ஆகாமை * நிச்சித்திருந்தேனே 4

நிச்சித்திருந்தேன் * என் நெஞ்சம் கழியாமை *
கைச் சக்கரத்து அண்ணல் * கள்வம் பெரிது உடையன் **
மெச்சப்படான் பிறர்க்கு * மெய் போலும் பொய் வல்லன் *
நச்சப்படும் நமக்கு * நாகத்து அணையானே 5

நாகத்து அணையானை * நாள் தோறும் ஞானத்தால் *
ஆகத்து அணைப்பார்க்கு * அருள் செய்யும் அம்மானை **
மாகத்து இள மதியம் * சேரும் சடையானை *
பாகத்து வைத்தான் தன் * பாதம் பணிந்தேனே 6

பணி நெஞ்சே! நாளும் * பரம பரம் பரனை *
பிணி ஒன்றும் சாரா * பிறவி கெடுத்து ஆளும் **
மணி நின்ற சோதி * மதுசூதன் என் அம்மான் *
அணி நின்ற செம்பொன் * அடல் ஆழியானே 7

ஆழியான் ஆழி * அமரர்க்கும் அப்பாலான் *
ஊழியான் ஊழி படைத்தான் * நிரை மேய்த்தான் **
பாழி அந்தோளால் * வரை எடுத்தான் பாதங்கள் *
வாழி என் நெஞ்சே! * மறவாது வாழ் கண்டாய் 8

கண்டேன் கமல மலர்ப் பாதம் * காண்டலுமே *
விண்டே ஒழிந்த * வினை ஆயின எல்லாம் **
தொண்டே செய்து என்றும் * தொழுது வழி ஒழுக *
பண்டே பரமன் * பணித்த பணி வகையே 9

வகையால் மனம் ஒன்றி * மாதவனை * நாளும்
புகையால் விளக்கால் * புது மலரால் நீரால் **
திசை தோறு அமரர்கள் * சென்று இறைஞ்ச நின்ற *
தகையான் சரணம் * தமர்கட்கு ஓர் பற்றே 10

** பற்று என்று பற்றிப் * பரம பரம் பரனை *
மல் திண் தோள் மாலை * வழுதி வள நாடன் **
சொல் தொடை அந்தாதி * ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் *
கற்றார்க்கு ஓர் பற்றாகும் * கண்ணன் கழல் இணையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---